**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**C.C. No. 184/2015.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1 – திரு. செல்லப்பாண்டி.**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.12.2025.

**(எதிரி V.C. மூலம் ஆஜர்படுத்தப்பட்டார். எதிரி தரப்பு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:–**

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால், டிரைவர் வேலை செய்து வருகிறேன். சம்பவ சமயத்தில் நான் எங்கு வேலை பார்த்தேன் என்றால், தேனி, பங்களா மேடு ஸ்டாண்டில் வாகனம் ஓட்டி வந்தேன். நான் என்ன படித்துள்ளேன் என்றால், நான் 12– ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? என்றால் தெரியும். சம்பவம் எத்தனை மணிக்கு நடந்தது என்றால், 01.00 மணி முதல் 03.00 மணிக்குள் இருக்கும். விபத்து நடந்தபோது, நான் ஆம்புலன்சில் சென்றேனா? என்றால் செல்லவில்லை. ஆம்புலன்ஸ் பெயர் தெரியுமா? என்றால் தெரியாது. விபத்து நடந்த பின்பு, போலீசார் சம்பவ இடத்திற்கு வந்தார்களா? என்றால் வந்தார்கள். போலீசார்தான் ஆம்பலன்சில் ஏற்றிவிட்டார்கள் என்றால், சரிதான். மருத்துவமனைக்கு எதில் சென்றேன் என்றால், பேருந்தில் சென்றேன். எத்தனை நபர்கள் சென்றோம் என்றால், நானும், என் அண்ணனும் பேருந்தில் சென்றோம். மருத்துவமனைக்குப் போலீசார் வந்தார்களா? என்றால், வந்தார்கள். எத்தனை மணிக்கு போலீசார் அங்கு வந்தார்கள் என்றால், எனக்கு ஞாபகமில்லை. போலீசார் மருத்துவமனையில் என்ன நடந்தது என விசாரித்துத் தெரிந்துகொண்டார்களா? என்றால், இல்லை. காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்று புகார் கொடுத்தோம் என்றால், இரவு சுமார் 08.00 மணியிருக்கும். புகார் யாரால் எழுதப்பட்டது என்றால், போலீசார்தான் எழுதினார்கள். அ.சா.ஆ.1 ஆன புகாரில் உள்ள விவரங்களை யார் கூறியது என்றால், நானும், எனது அண்ணனும் கூறினோம். எனது அண்ணன், புகாரில் சாட்சிக் கையொப்பம்

செய்தாரா? என்றால், செய்துள்ளார். புகார் கொடுத்த சமயத்தில் யார், யார் உடனிருந்தோம் என்றால், நானும், என் அண்ணனும் மற்றும் அழகுராஜாவின் குழந்தைகளும் இருந்தோம். இறந்துபோன அழகுராஜா எனக்கு உறவினர் என்றால், சரிதான். எலுமிச்சம் பழக்கடை எந்தத் திசையில் உள்ளது என்றால், தேனி முதல் பெரியகுளம் ரோட்டில் மேற்குப் பக்கத்தில் உள்ள கடை கிழக்கு திசை பார்த்து உள்ளது. அழகுராஜா, என்னிடம் பேசிவிட்டுத்தான் கிளம்பினார் என்றால், இல்லை. அழகுராஜா எந்த திசை நோக்கிச் சென்றார் என்றால், கம்பம் ரோட்டிலிருந்து மதுரை ரோடு நோக்கிச் சென்றார். சம்பவ இடம் 3 ரோடுகள் சந்திக்கும் இடம் என்றால், சரிதான். லாரி எந்த திசையிலிருந்து, எந்த திசை நோக்கி வந்தது என்றால், கம்பத்திலிருந்து, பெரியகுளம் நோக்கி லாரி சென்றது. விபத்து சமயத்தில் அந்தயிடத்தில் யார், யார் இருந்தோம் என்றால், நானும், எனது அண்ணனும் மட்டும்தான் இருந்தோம். லாரியை ஓட்டி வந்த ஒட்டுநர் பெயர் தெரியுமா? என்றால் தெரியாது. விபத்து நடந்த சமயத்தில், நான் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், விபத்தில் இறந்த நபர் எனது உறவினர் என்பதாலும், அவருக்கு விபத்துக் காப்பீடு கிடைக்க வேண்டும் என்பதற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் காவல் நிலையம் சென்று புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. விபத்து எதிரியின் கவனக் குறைவால் மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டதல்ல என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2025.12.03 19:06:58 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**